# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1977/2 - 2016 ජූලි මස 25 වැනි සඳුදා - 2016.07.25

1977/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இலக்கம்: ඉ/අත්/UDA/351.

பொது மக்கள் பாவனைக்காக கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவு, மாகும்புற வடக்கு இல. 498A கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ளதும், காணி அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க மாதிரிப்பட இல. 9634 இல் காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகளின் மொத்த விஸ்தீரணம் 0.8207 ஹெக்டயார் ஆகும். காணியின் விபரங்கள் பின்வருமாறு:

**துண்டு இல. 01**
காணியின் பெயர்: மாகும்புற வெலயாய; விபரம்: கைவிடப்பட்ட வயல்வெளி மற்றும் இயற்கை கால்வாய், 15 - 20 வருடங்களையுடைய 13 தென்னை மரங்கள்; உரிமை கோருபவர்: யசபால எல்விற்றிகல மற்றும் ஏனையோர்கள் மாகும்புற, பன்னிபிட்டிய; விஸ்தீரணம்: 0.4180 ஹெக்டயார்.

**துண்டு இல. 02**
காணியின் பெயர்: மாகும்புற வெலயாய; விபரம்: கைவிடப்பட்ட வயல்வெளி; உரிமை கோருபவர்: ஹென்றிக் மற்றும் ஏனையோர்கள் மாகும்புற, பன்னிபிட்டிய; விஸ்தீரணம்: 0.2960 ஹெக்டயார்.

**துண்டு இல. 03**
காணியின் பெயர்: மாகும்புற வெலயாய; விபரம்: கைவிடப்பட்ட வயல்வெளி மற்றும் இயற்கை கால்வாய், 15 - 20 வருடங்களையுடைய 05 தென்னை மரங்கள்; உரிமை கோருபவர்: களுதந்திரிகே இந்திரவத்தி பீரிஸ், இல. 185/A, மாலபல்ல, பன்னிபிட்டிய; விஸ்தீரணம்: 0.0942 ஹெக்டயார்.

**துண்டு இல. 04**
காணியின் பெயர்: தெரியாது; விபரம்: வீதி; உரிமை கோருபவர்: தெரியாது; விஸ்தீரணம்: 0.0125 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 24 ஆந் திகதி மு.ப. 9.00 மணிக்கு, மஹரகம பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தப்படல் வேண்டும்.

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடைமை களின் தன்மையையும் குறித்த காணிகளை எடுத்தற்கான

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் 29 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச செயலாளர்,
காணி சவீகரிப்பு அலுவலர்,
மஹரகம.

பிரதேச செயலகம்,
மஹரகம,
2016, யூலை 20.

8 - 157

---

## திருத்தற் பத்திரம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளரின் குறிப்பு இல.:
6/3/7/15/11/7/35.
காணி அமைச்சின் குறிப்பு இல.:
LD/05/2007/MV/117C.

காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் 2015.03.04 ஆந் திகதிய, இலக்கம் 1904/33 கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிஷேட வர்த்தமானப் பத்திரிகையில் 6A பக்கத்தில் இலக்கம் 101 இன் கீழ் பிரசுரிக்கப்பட்ட பூ.பூ.வ 18 குறைநிரப்பி இலக்கம் 64 பத்திரம் 47 இல் துண்டு இலக்கம் 2492 இனது விஸ்தீரணம் 0.2967 ஹெக்டயார் எனத் திருத்தப்படல் வேண்டுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டீ.ஆர்.பீ.என்.பீ. கருணாதிலக்க,
பிரதேச செயலாளர்,
நாவுல.

பிரதேச செயலகம்,
நாவுல,
2016, யூலை 13.

8 - 158

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

### 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: பகம/பிசெ/2/2/575.

மேற்குறித்த தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் இலக்கம் 1301/18 மற்றும் 2003.08.15 ஆம் திகதிய வர்த்தமானப் பத்திரிகையில் (அதிவிஷேட) பத்தேகம பிரதேச செயலாளரினால் பிரசுரிக்கப்பட்ட காணி சுவீகரித்தல் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தலில் இலக்கம் கா 3283 உடைய ஆரம்ப நிலவரைபடத்தின் துண்டு இலக்கம் 18 சம்பந்தமாக உரிய திகதிகள் பின்வருமாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

### திருத்தம்

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 14 ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு பத்தேகம பிரதேச செயலகத்தில் என் முன்பாக தோன்றல் வேண்டும். மேலும், அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2016 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 07 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

டீ.கே.எஸ். ஜயலக்ஷ்மி,
பிரதேச செயலாளர்,
பத்தேகம.

பிரதேச செயலகம்,
பத்தேகம,
2016, யூலை 14.

8 - 159

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.